**சார்பு நீதிமன்றம், இரணியல்.**

**முன்னிலை. M. ஜெய்சங்கர், M.A.,B.L.,**

**சார்பு நீதிபதி, இரணியல்**

**2022-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ம் நாள் புதன்கிழமை**

**O.S.No.121 /2021**

ரவீந்திரன்

..... வாதி

/எதிர்/

மணிவாசன் .... பிரதிவாதி

இவ்வழக்கு 6.04.2022 அன்று என் முன்பாக முடிவான விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் விசாரிக்க வழக்கறிஞர் திரு. M.P.N.அம்பாடி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் ஒருதலைப்படுத்தப்பட்டார். வாதிதரப்பு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும், இந்த வழக்கு இந்நாள்வரை எனது பரிசீலனையில் கீழ் இருந்து வந்த பின் இன்று இந்நீதிமன்றம் கீழ் கண்டவாறு வழங்கும் .

**தீர்ப்புரை**

வாதி தொகை ரூ.2,71,934/- மற்றும் வட்டியுடன் கோரி தாவா தாக்கல் செய்யப்பட்டது.

2. **வாதியின் வழக்குரை சுருக்கம்.**

பிரதிவாதி வாதிக்கு பழக்கப்பட்ட நபர் என்றும், பிரதிவாதி கடந்த 07.09.2016 தேதியில் சொந்த தேவைக்காக வாதியிடம் இருந்து, ரூ. 2,00,000/- கடன் வாங்கினார். அன்றைய தினமே பிரதிவாதி கடன் தொகைக்கு 12% வீதம் வட்டி தருவதாக கூறி ஒரு பிராமிசரிநோட் எழுதி கொடுத்தார். பிரதிவாதி உறுதியளித்தது போல வட்டியையோ அல்லது அசலையோ திருப்பி தரவில்லை. வாதி பலமுறை பணத்தையும் அதற்குரிய வட்டியையும் திருப்பி தருமாறு கேட்ட

போது, பிரதிவாதி பணத்தை தராமல் காலம் கடத்தி வந்தார். வாதி 24.11.2018 தேதியன்று பிரதிவாதிக்கு வழக்கறிவிப்பு அனுப்பினார். பிரதிவாதி 27.11.2018 தேதியில் வழக்கறிவிப்பை பெற்றுக்கொண்டு அசல் தொகையையும் வட்டியையும் திரும்ப செலுத்தவில்லை. எவ்வித பதிலோ தரவில்லை. பிரதிவாதி வேண்டுமென்றே பணத்தை தராமல் ஏமாற்றி வருகிறார். அதனால் வாதி ரூ.. 2,71,934/- கோரி தாவா தாக்கல் செய்துள்ளார்.

3. பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எந்த பதில் உரையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஒருதலைப்படுத்தப்பட்டார்.

4. வாதி தரப்பில், வா.சா.1 ஆக ரவீந்திரன் விசாரிக்கப்பட்டும், வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. வாதி இவ்வழக்கில், தன்னுடைய சாட்சியத்தை, சத்திய பிரமாணமாக தாக்கல் செய்துள்ளார். வழக்குரையை ஒத்து சத்திய பிரமாணம் அமைந்துள்ளது. வா.சா.ஆ.1 07.09.20176 தேதியிட்ட பிராமிசரி நோட்டு, வா.சா.ஆ.2- 15.11.2018 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு, வா.சா.ஆ. 3- 24.11.2018 தேதியிட்ட அஞ்சலக ரசீது, வா.சா.ஆ.4 - 18.10.2019 தேதியிட்ட அஞ்சல் ஒப்புதல் அட்டை, ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. வாதி தரப்பு ஆவணங்கள் மற்றும் சாட்சியத்தை பரிசீலனை செய்யும் போது, வாதி வா.சா.ஆ.1 முன்னிலையாக்கி, பிரதிவாதி ரூ. 2,00,000/- கடன் பெற்றுள்ளார் என்பது உறுதியாகிறது. பிரதிவாதி மேற்படி தொகையை பெற்றுக்கொண்டு, ஒப்புக்கொண்ட படி அசலும் வட்டியும் திருப்பி செலுத்தவில்லை. இதனால் வாதி பிரதிவாதிக்கு வழக்கறிஞர்

அறிவிப்பு அனுப்பினார். வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டு எந்த பதிலோ பணமோ திருப்பி செலுத்த வில்லை. பிரதிவாதீ கடனை திருப்பி செலுத்த வில்லை என்பது வாதி தரப்பு ஆவணங்கள் மூலம் உறுதியாகிறது. பிரதிவாதி நீதிமன்றத்தில் தோன்றி தங்கள் தரப்பு நியாயத்தை தெரிவிக்கவில்லை. இதன் மூலம் வழக்கில் அக்கறை, விருப்பம் இல்லை என்பது தெளிவாகிறது. வாதியின் வழக்குரை, வா.சா.1 சத்தியபிரமாணம், வாதியின் ஆவணங்கள் வழக்கை மெய்பிக்கிறது.

எனவே வாதி கோரிய படி, தாவா தொகை ரூ.2,71,934/-/- ஐ, பிரதிவாதி 6 மாதத்தில் திருப்பி செலுத்தவும், அசல் தொகைக்கு தாவா தாக்கல் செய்த தேதியில் இருந்து தீர்ப்பாணை தேதி வரை 12 % வட்டியும், தீர்ப்பாணை தேதியில் இருந்து செலுத்தி முடிக்கும் வரை 6 % வட்டியும் வழங்க உத்தரவிட்டு தாவா செலவுதொகையுடன் அனுமதித்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் எழுதி பெயர்த்து கணனியில் தட்டச்சு செய்யப்பட்டதை, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2022-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

M JAISANKAR
Digitally signed by M JAISANKAR
Date: 2022.04.06 18:12:32 +0530

**சார்பு நீதிபதி,**

**இரணியல்.**

**வாதி தரப்பு சாட்சி**

1. ரவீந்திரன்

**பிரதிவாதி தரப்பு சாட்சி** ..

இல்லை

**வாதி தரப்பு ஆவணங்கள்..**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வா.சா.ஆ.1 | 07.09.2016 | தேதியிட்ட | பிராமிசரி நோட்டு |
| 2. | வா.சா.ஆ.2 | 15.11.2018 | தேதியிட்ட | வழக்கறிஞர் அறிவிப்பு |
| 3. | வா.சா.ஆ.3 | 24.11.2018 | தேதியிட்ட | அஞ்சலக ரசீது |
| 4. | வா.சா.ஆ.4 | 18.10.2019 | தேதியிட்ட | அஞ்சல் ஒப்புதல் அட்டை |

பிரதிவாதி தரப்பு ஆவணங்கள்.

இல்லை

M JAISANKAR Digitally signed by M JAISANKAR Date: 2022.04.06 18:12:43 +0530

**சார்பு நீதிபதி,**

**இரணியல்.**